நகராட்சி அலுவலகம்
பொன்னேரி

கூட்டம் எண். 01 / 2025 நாள்: 31.01.2025

# சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் டிசம்பர் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்**: 626 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்: மன்றம் பதிவு செய்கிறது.**

**பொருள் எண் 2**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்**: 627 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்: மன்றம் பதிவு செய்கிறது.**

**பொருள்எண் 3**

பொன்னேரி நகராட்சியில் அலுவலகத்தில் மின் துண்டிப்பு (Power cut) ஏற்படின் சிறிய வகை Genset தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சிறிய வகை Genset அடிக்கடி பழுதடைவதால் போதுமான மின்சாரம் வழங்க ஏதுவாக இல்லை. மேலும் தற்போது கூடுதல் அலுவலக கட்டிடம் பயன்பாட்டுக்கு வர இருப்பதால் புதியதாக 82.5 KVA மின் ஆக்கி ஒன்று

வாங்கிடவும் அதற்கான செலவினம் ரூ 17.35 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கிடலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 628** **நாள்: 31.01.2025**

**தீர்மானம்:** புதியதாக 82.5 KVA மின் ஆக்கி ஒன்று வாங்கிட செலவினம் ரூ 17.35 இலட்சம் மேற்கொள்ள நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்குகிறது.

<u>பொருள்எண் 4</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டில் உள்ள கண்காணிப்பு கேமரா பழுதடைந்த நிலையில் உள்ளதால் இதை பழுது நீக்கம் செய்தால் கூடுதல் செலவினம் ஆகும் என்பதாலும் நகராட்சி அலுவலகம் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்மன்ற கட்டிடத்திற்கும் சேர்ந்தார் போல் புதியதாக கண்காணிப்பு கேமரா பொருத்த உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கிடலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 629** **நாள்: 31.01.2025**

**தீர்மானம்:** நகராட்சி கட்டிடத்திற்கு புதியதாக கண்காணிப்பு கேமரா பொருத்த - செலவினம் ரூ.3.50 இலட்சம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்குகிறது.

<u>பொருள்எண் 5</u>

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கள்ளுக்கடை மேடு பகுதியில் இரண்டு எண்ணிக்கை MCC மற்றும் MRC அமைந்துள்ளது. இந்த பகுதியில் பொது சுகாதார வாகனங்கள் மற்றும் சுகாதார பொருட்கள் இருப்பில் இருப்பதால் பாதுகாப்பு நலன் கருதி தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திடவும் அதற்கான செலவினம் ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கிடலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 630 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்**: வார்டு 7 பாதுகாப்பு நலன் கருதி MCC , MRC கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட செலவினம் ரூ.3.40 இலட்சம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்குகிறது

**<u>பொருள்எண் 6</u>**

பொன்னேரி நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. தற்போது நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருவள்ளூர் மூலமாக வரப்பெற்றுள்ள கடித எண் Lr.No.21125/F-Ponneri UGSS/EE/RWS/TRL/ 2025/DT. 21.01.2025ன்படி பாதாள சாக்கடையிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை நாளொன்றுக்கு 6.0 மில்லியன் லிட்டர் என்கிற அளவில், ஆயிரம் லிட்டருக்கான விலை ரூ.18.41 என்று நிர்ணயித்து புதுகும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சூர்யதேவ் உருக்காலை என்கிற தனியார் நிறுவனத்திற்கு வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றித் தர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 511/2021/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 631 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்**: கழிவு நீரை 1000 லிட்டருக்கு ரூ.18.41 என்கிற ரீதியில் 6.0 மில்லியன் லிட்டர் என்கிற அளவில் சூர்யதேவ் உருக்காலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றித் தர மன்றத்தின் அனுமதிக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது-

**<u>பொருள்எண் 7</u>**

பொன்னேரி நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BK 4856 வாகனத்தின் நான்கு டயர்களும் மிகவும் தேய்ந்து பழுதாகி உள்ளதால் வாகனம் இயக்க சிரமமாக உள்ளதால் புதிய டயர்கள் வாங்கி பொருத்தி தருமாறு ஓட்டுநர் கடிதம் கொடுத்துள்ளார். எனவே வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்களும் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ27,700/- பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 454/2021/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 632 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்**: BOLERO வாகனம் TN 18 BK 4856 புதியதாக நான்கு டயர்கள் வாங்க ரூ27,700/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது

**பொருள்எண் 8**

பொன்னேரி நகராட்சியில் MP LAD 2024-2025 ன் கீழ் கீழ்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 1249/2024/இ1 நாள் 17.12.2024 -ன்படி 31.12.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் (MP LAD 2024-2025) | மதிப்பீட்டு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பொன்னேரி நகராட்சி வார்டு எண் 14ல் அதாவுல்லாஷா குறுக்கு தெரு உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணி | 4.35 | திரு.A.S.புவனேஷ் குமார், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | திரு.B.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 1249/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 633 **நாள்:** 31.01.2025

**தீர்மானம்:** MP LAD அதாவுல்லாஷா குறுக்கு தெரு உயர்கோபுர மின் விளக்கு அமைத்தல் ஒப்பந்ததாரருக்கு - பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது/

**பொருள்எண் 9**

பொன்னேரி நகராட்சியில் பேரிடர் மேலாண்மை – மிக்ஜாம் புயல் பெய்த மிக கன மழை 2023 பெருவெள்ளத்தினால் முழுவதும் சேதமடைந்த வீடுகளை புதிதாக கட்டுவதற்கு மற்றும் பகுதியாக சேதமடைந்த வீடுகளுக்கு பழுது நீக்கம் மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண் 32 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந. 7) நாள்: 04.03.2024 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண் 10383/2021/SS3 நாள்06.03.2024ன்படி கீழ்கண்ட விவரப்படி பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## விவரம்

| வ.எண் | நகராட்சியின் பெயர் | பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | முழுவதுமாக பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான தொகை | முழுவதுமாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான தொகை |
| 1 | பொன்னேரி | 121 | 12 | 242 | 48 |
| | மொத்தம் | 121 | 12 | 242 | 48 |

மேற்கண்ட பணிக்கு பழுதடைந்த வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ரூ2.00 இலட்சம், முழுவதுமாக சேதமடைந்த ஒரு வீட்டிற்கு ரூ4.00 இலட்சம் வீதம் என்ற விகிதத்தில் இந்நகர்மன்ற தீர்மானம் எண் 447 நாள் 14.03.2024 ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 12522/2024/SS3 நாள் 24.05.2024 ன் தேதிய கடிதத்தில் மேற்படி சேதமடைந்த வீடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை பயனாளிகளுக்கு அரசாணையில் குறிப்பிட்டுள்ள தவணைகளின் அடிப்படையில் வழங்க தேவையான தொகை ஏதும் இதுவரை பெறப்படாத நிலையில் வாழ்விட பாதிப்புக்குள்ளோரின் நலனை கருத்திற் கொண்டு பணியின் முன்னேற்றத்தின் அடிப்படையில் மேற்கண்ட தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் பேரிடர் மேலாண்மை நிதி அரசிடமிருந்து வரப்பெற்ற பின்னர் அதனை பொதுநிதிக்கு மாற்றம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்கண்ட பணிகளை செய்திடவும் இதற்கான தொகை நகராட்சி நிதியில் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மேற்கண்ட தொகையினை நகராட்சி நிதியில் செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) திட்ட ஒதுக்கீடு தொகை வரப்பெற்றபின் நகராட்சி நிதிக்கு ஈடுசெய்யலாம்
   (ந.க.எண் 354/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 634 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்**:

**பொருள்எண் 10**

பொன்னேரி நகராட்சியில் பருவ மழை 2024 மற்றும் பெங்கல் புயலின் காரணமாக பலத்த மழை பெய்து வருவதால் ஆங்காங்கே மழைநீர் தேக்கமடைந்து பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் போக்குவரத்து மற்றும் பொது சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் தற்போது நகராட்சியில் உள்ள டீசல் என்ஜின் மூலம் ஒருசில பகுதிகளில் மழைநீர்

வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆரணி ஆற்றில் தண்ணீர் அதிகமாக வருவதால் கரையோரம் உள்ள பகுதியில் தேங்கி உள்ள மழைநீர் ஆரணி ஆற்றுக்குள் தானாக செல்ல வழிவகை இல்லாததால் வார்டு எண் 5 மற்றும் 2 ல் மழைநீர் சாலைகளில் தேக்கமடைகிறது. இந்நிலையை தவிர்க்கும் பொருட்டு ஒரு எண்ணிக்கை 5 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பொருத்தி மழைநீரை வெளியேற்றவும் இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ1,44,000/-க்கு பணிமேற்கொள்ளவும், மேலும் இப்பணி உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் எண் 57(7) ன் செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மாவட்ட நகராட்சிகள் சட்டம் எண் 57(7)-ன் படி பணி முடிக்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க. எண் : 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 635** **நாள்: 31.01.2025**

**தீர்மானம்**: ஃபெங்கல் புயல் வார்டு 5 மற்றும் வார்டு 2 ல் மழைநீரை வெளியேற்ற மின்மோட்டார் பொருத்தி மாவட்ட நகராட்சிகள் சட்டம் எண் 57(7) ன் செலவினம் மேற்கொண்டமைக்கு பணி முடிக்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது..

**<u>பொருள்எண் 11</u>**

பொன்னேரி நகராட்சியில் குடிநீர் திட்டம் ஏதும் இல்லாததால் 67 ஆழ்துளை கிணற்றுகள் வழியாக உள்ளூர் நீர் ஆதாரங்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பகுதியில் பெய்து வரும் பருவமழை மற்றும் ஃபெங்கல் புயல் 2024 காரணமாக அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்ய அறிவுறுத்தியுள்ளதால் முற்றிலும் மின் தடை ஏற்படக்கூடும் என்பதால் தேவையான இடங்களில் மின் ஆக்கிகள் (Genset) மூலம் மின் மோட்டார்கள் இயக்கவும் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக வாடகை அடிப்படையில் 40 KVA ஜெனரேட்டரை பயன்படுத்துதல் பணி மேற்கொள்ள இதற்கான உத்தேச செலவினம் ரூ1,31,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்யவேண்டியுள்ளதால் மாவட்ட நகராட்சிகள் சட்டம் எண் 57(7)-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மாவட்ட நகராட்சிகள் சட்டம் எண் 57(7)-ன் படி பணி முடிக்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க. எண் : 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 636** **நாள்: 31.01.2025**

**தீர்மானம்**: பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்ய -தேவையான இடங்களில் Genset மூலம் மின்மோட்டார்கள் இயக்க வாடகை அடிப்படையில் 40 KVA ஜெனரேட்டரை பயன்படுத்துதல் பணி மேற்கொள்ள செலவினம் ரூ1,31,000/- மேற்கொண்டமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது..

**பொருள்எண் 12**

இந்நகராட்சிக்குட்பட்ட சொத்துவரி, தொழில்வரி , தொழில் உரிமம் குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகைகளை பொதுமக்கள் 31.03.2025-க்குள் நகராட்சி அலுவலகத்தில் செலுத்துமாறு அறிவிக்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.50/- இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் 06 / 2024/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 637 **நாள்**: 31.01.2025

**தீர்மானம்**: ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தமைக்கு ரூ.1.50/- இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்